அடையாள இலக்கம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| B | | | | | | |

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2023

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

# மத்திய பிரிவு

(8 – 9 வயதுப் பிரிவு)

நேரம்: 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

## (அ) பொருத்தமான ஒரு எழுத்தைக் கொண்டு கோடிட்டஇடங்களை நிரப்புக.

1. பாடசா______
2. பு ____ன்கிழமை
3. ஆவ_____ மாதம்
4. எனது கு______ம்பம்
5. மிருக______ கள்
6. ____ராட்சைப் பழம்
7. முருங்கைக் ______ய்
8. பச்சைக் ______ளி
9. இடி______ப்பம்
10. தாமரைப் ______

(10 புள்ளிகள்)

## (ஆ) கீழே தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து வசனத்தைப் பூர்த்தி செய்க.

**குறிப்பு** : சரியான விடையினைக் கோடிட்ட இடத்தில் எழுதாதவர்களுக்குப் புள்ளிகள் **வழங்கப்படமாட்டாது**

1. நான் ____________________ பாடசாலைக்குச் சென்றேன்.

   அ) அப்பாவோடு ஆ) அப்பாவிடம்

   இ) அப்பாவுக்கு ஈ) அப்பா

2. கண்ணன் ____________________ பூங்காவில் பார்த்தான்.

   அ) நண்பனுக்கு ஆ) நண்பன்

   இ) நண்பனை ஈ) நண்பனிடம்

3. நான் ____________________ புத்தகத்தை இரவல் பெற்றேன்.

   அ) நூலகம் ஆ) நூலகத்தில்

   இ) நூலகத்தை ஈ) நூலகத்தோடு

4. காட்டிலுள்ள ____________________ வெட்டினார்கள்.

   அ) மரங்களை ஆ) மரங்களுக்கு

   இ) மரங்கள் ஈ) மரங்களிடம்

5. ஓவியக் கண்காட்சியை ____________________ பார்க்க முடிந்ததா?

   அ) உன் ஆ) உன்னுடன்

   இ) உன்னால் ஈ) உன்னை

(10 புள்ளிகள்)

**(இ) கீழே தரப்பட்ட ஒருமைச் சொற்களுக்குப் பன்மைச் சொற்களை எழுதுக.**

1. பூ : ______________________________
2. கிளி : ______________________________
3. பல் : ______________________________
4. பழம் : ______________________________
5. சிறுவன் : ______________________________

(10 புள்ளிகள்)

**(ஈ) கீழே தரப்பட்ட வாக்கியத்திலே கோடிட்ட சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிந்து அதன் கீழே கோடிடுக.**

1. எனது தோட்டத்தில் பல வண்ண **மலர்கள்** பூத்திருந்தன.
   அ) செடிகள் ஆ) கொடிகள்
   இ) பூக்கள் ஈ) காய்கள்

2. **புத்தகம்** வாசிப்பது நல்ல பழக்கம்.
   அ) நூல் ஆ) தாள்
   இ) கடுதாசி ஈ) அஞ்சல்

3. இரவில் **விண்மீன்களை** ஆகாயத்தில் பார்க்கலாம்.
   அ) சூரியனை ஆ) நட்சத்திரங்களை
   இ) பால்வெளியை ஈ) அண்டங்களை

4. நான் **தோழியுடன்** சேர்ந்து விளையாடுவேன்.
   அ) சிநேகிதியுடன் ஆ) சகோதரனுடன்
   இ) பெற்றோருடன் ஈ) மாணவருடன்

5. பலர் சமூகத்துக்கு **தொண்டு** செய்வதை விரும்புகின்றனர்.
   அ) சேவை ஆ) கூலி
   இ) எழில் ஈ) பணம்

(10 புள்ளிகள்)

**(உ) முதல் வாக்கியத்தில் கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட வினைச்சொல்லை அதன் கீழுள்ள வாக்கியத்தின் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றி தரப்பட்ட இடைவெளிக்குள் எழுதுக.**

1. இப்பொழுது நாங்கள் எமது வீட்டில் உணவு **உண்கிறோம்.**
   நேற்று நான் என் நண்பன் வீட்டில் உணவு ____________________ .

2. இப்பொழுது அவள் நடனம் **ஆடுகிறாள்.**
   நேற்று அவள் நடனம் ____________________ .

3. நேற்று வாணி படம் **வரைந்தாள்.**
   நாளை வாணி படம் ____________________ .

4. நேற்று மழை **பெய்தது.**
   இப்பொழுது மழை ____________________ .

5. நேற்று அவர் என்ன **செய்தார்?**
   நாளை நீங்கள் என்ன ____________________ .

(10 புள்ளிகள்)

**(ஊ) கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்துத் தரப்பட்ட சிறுகதையை பூர்த்தி செய்க.**

| | | | |
|---|---|---|---|
| கடிவாளம் | மோப்ப | படைகளுள் | செவிப்புலன் |
| பலவழிகளுள் | இணைந்ததாகும் | கொள்வதால் | ஈடுபடுதல் |
| சேர்ந்ததாகும் | மெதுவாகவும் | மறைக்க | இடைவெளி |

## குதிரை

வீட்டில் வளர்க்கப்படும் மிருகங்களுள் குதிரையும் ஒன்று. குதிரை தான் ஈன்றெடுத்த குட்டிக்குப் பால் கொடுத்து வளர்ப்பதால் இது பாலூட்டி இனத்தை (1)__________________. குதிரை தாவரங்களை உணவாக (2)________________ இது தாவர உண்ணி விலங்கு எனப்படுகிறது. தன் உணவை (3)__________________, நன்றாகவும் மென்று விழுங்கும் பழக்கமுடைய குதிரை, பசுவைப் போல் அசை போடுவதில்லை.

குதிரை, மிகவும் கூரிய அறிவுள்ள விலங்காகும். இதன் (4)________________ மிகக் கூர்மையானது. அவ்வாறே இதற்கு (5)__________________ சக்தியும் அதிகமாக உள்ளது. புதுமையான பொருளைக் கண்டால் குதிரை மருளும். எனவே அது மருளாமல் இருப்பதற்காகக் கண்ணின் முன் பக்கத்தைத் தவிர மற்ற பாகங்களை (6)__________________ தோற்பட்டைச் சேணம் கட்டுவார்கள். இதன் முன் பற்களுக்கும் கடைவாய்ப் பற்களுக்கும் நடுவே (7)__________________ உண்டு. அங்கேதான் (8)__________________ பொருத்தப்பட்டிருக்கும். குதிரைக்கு விரைவாகச் செல்லுதல், கடினமான உழைப்பில் (9)__________________ போன்ற குணங்கள் உள்ளன. பண்டைத் தமிழ் அரசர்கள் போர்க்காலத்தில் பயன்படுத்திய நால்வகை (10)________________ குதிரைப் படையும் ஒன்றாகும்.

(20 புள்ளிகள்)

**(எ) கீழேயுள்ள படத்தைக் கவனமாகப் பார்த்து, கருத்தை விளங்கி தரப்பட்ட ஐந்து (5) சொற்களுக்கு பொருத்தமான வசனங்களை எழுதுக.**

**குறிப்பு** : மிகக் குறைந்தது **7** சொற்கள் கொண்ட வசனமாக இருக்கவேண்டும்.



1. கடற்கரை :

2. மணல்வீடு :

3. நீச்சல் :

4. செய்தித்தாள் :

5. பாயில் உட்கார்ந்து :

(15 புள்ளிகள்)

**(ஏ) குறைந்தது 40 சொற்களில் கீழே தரப்பட்ட தலைப்பைப் பற்றி எழுதுக.**

**எனது தமிழ்ப் பாடசாலை**

(15 புள்ளிகள்)